# சகல பாடசாலைகளும் உடன் ஆரம்பிக்கலாம்


விலை ரூபா 3-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 புரட்டாதி: 25 றபீஉல் அவ்வல் பிறை: 21 இதழ்: 169

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11-10-1990


## யாழ். கல்விப்பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சகல வகுப்புகளும் முன்னர்போல் நடத்தப்படலாம். அதிபர், ஆசிரியர்கள் தவறாது தங்களது பாடசாலைகளுக்கு கடமைக்கு செல்லவேண்டும்.

யாழ். கல்விப்பணிமனையில்

[4-ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற 10,000 பயணிகள் வவுனியா முகாமில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பிரயாணிகள் தற்போது வவுனியாவிலுள்ள அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர்.

வவுனியாவிலிருந்து கொழும்புக்குச் செல்வதற்கு ரயிலில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதினால் தினமும் ஆயிரம் பிரயாணிகளை மட்டுமே கொழும்புக்கு ரயிலில் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி அளித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. (வி)

## ● கோண்டாவில் பகுதியில் பொம்மர் தாக்குதல்

# குழந்தையை அரவணைத்தபடி தாய் பலி; நால்வர் படுகாயம்!

## 10கடைகள், 3 வீடுகள் சேதம்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் ஏழுநாள் குழந்தைக்கு தாயான பெண்மணி ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். இவரது கணவர் மற்றொரு குழந்தை உட்பட நால்வர் படுகாயமடைந்தனர். பத்து வர்த்தக நிலையங்கள் மூன்று வீடுகள், தனியார் சிகிச்சை நிலையம் என்பன பலத்த சேதமடைந்தன.

தாய் அரவணைத்த நிலையில் இருந்த 7 நாள் ஆண் குழந்தை தாயின் இரத்தத்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதல்: வங்காலையில் 6ராணுவம்பலி அதிகாரியின் தலைதுண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

வங்காலை கடற்கரைப் பகுதியில் சிங்கள இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினர் அப்பகுதியில் உள்ள தமிழ் பொதுமக்களின் வீடுகளில் கொள்ளையடித்துக்கொண்டிருக்கும் போது விடுதலைப் புலிகள் இவர்களை சுற்றிவளைத்து தாக்குதல் நடாத்தியதில் 6

(3-ம் பக்கம் பார்க்க)

## யாழ். கோட்டைப் பகுதியில் விமானத்தாக்குதல் இளம்பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ், கோட்டைப்பகுதியைச் சுற்றி நேற்று மாலை 12 விமானமொன்று கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் குண்டுத்தாக்குதலையும் நடத்தியது.

(4ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி மின் விநியோகம் இன்று சில இடங்களுக்கு எந்நேரமும் கிடைக்கலாம்!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள சில இடங்களுக்கான மின்விநியோகம் இன்று எந்நேரத்திலும் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மந்திகை, சாவகச்சேரி, கோப்பாய் பகுதிகளில் இயங்கிவரும் ஆஸ்பத்திரிகளுக்கு பரீட்சார்த்தமாக இந்த மின்விநியோகம் நடைபெறவுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

33 கே, வி. மார்க்கத்தில் வழங்கப்படவிருக்கும் இந்த மின்விநியோகம் பகலில் மட்டும் நடைபெறவுள்ளதாக அறியப்படுகிறது.

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் உள்ள சில

(4ம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்டத்தில் தள்ளாடி, தலைமன்னாரில் மட்டுமே இராணுவ முகாம்கள்

### மக்களுக்கு புலிகள் உதவி

(நமது நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தள்ளாடி இராணுவ முகாமிலும் தலைமன்னார் கடற்படைமுகாமிலும் மட்டுமே இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

விடத்தல்தீவு இராணுவ முகாமில் இருந்த இராணுவத்தினர் தலைமன்னார் கடற்படைமுகாமில் தங்கியுள்ளனர்

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து மன்னார் பாலம்வரை வரும் இராணுவத்தினர் உடனடியாக முகாமுக்குத்திரும்பிச் செல்வார்கள்.

மன்னார் பெரிய கடைப்

(4-ம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்க பாதுகாப்புடன் வந்த 2 இளைஞர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச் சங்கப்பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்ட தமிழ் இளைஞர்களை சிங்கள இராணுவத்தினர் சுட்டுகொன்றனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது:

அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில் பகுதியில் இருந்து 8 தமிழ் இளைஞர்களை செஞ்சிலுவைச் சங்கத்தினர் தம்து வாகனத்தில் சிங்கள

[3-ம் பக்கம் பார்க்க]

## "இந்தியா காலம்தாழ்த்தாது ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்"

### - விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(யாழ்ப்பாணம்)

''இந்தியா காலம் தாழ்த்தாது தமிழ் மக்களின் தன்னுரிமையை (சுயநிர்ணய உரிமை) அங்கீகரிக்க வேண்டும்'' என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு நேற்றிரவு வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''கடந்த மூன்று ஆண்டு கால பாடத்தை தமிழீழம் மறந்துவிடக்கூடாது'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

''சிறிலங்காவைப் பொறுத்தவரை 42 ஆண்டு கால படிப்பினையைக்

(4ம் பக்கம் பார்க்க)

# ★ கிழக்கில் தொடரும் தமிழர்படுகொலையைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுங்கள்

## லண்டனில் புலிகள் அறிக்கை

(லண்டன்)

''கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து மனிதஉரிமை மீறல் நடைபெற்று வருகின்றது. இது வெளி உலகிற்கு எதுவுமே தெரியாது'';

இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகள் லண்டனில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர். இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கிழக்குமாகாணத்தில் தமிழ் மக்கள் தினமும் இராணுவத்தினராலும், ஊர்காவற்படையினராலும் 'சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்படுகின்றார்கள். தமிழ் மக்களின் வீடுகளும், உடைமைகளும் அழிக்கப்பட்டு வருகின்றது.

அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்துள்ள தமிழ் மக்களையும் இராணுவத்தினர் கொலைசெய்துவருகின்றார்கள். இதனால் கிழக்கு மாகாண தமிழ்மக்கள் பெரும்பாலானோர் மேற்படி அட்டூழியங்களுக்கு பயந்து காடுகளில் ஓடிமறைந்து வாழ்கின்றார்கள்.

இதுபோன்ற அட்டூழியங்களை வெளி உலகிற்கு எடுத்துக் காட்டுவதுடன் இதனைத் தடுப்பதற்கு உலக மனித உரிமைகள் அமைப்பு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். (வி)

## பருவ மழை வீழ்ச்சி இவ்வாரம் ஆரம்பமாகும்

(கொழும்பு)

நாட்டின் சகல பகுதிகளிலும் இவ்வாரம் முதல் பருவ மழை ஆரம்பமாகுமென 'வானியல் திணைக்களம்' அறிவித்துள்ளது.

பருவமழை கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட வேண்டியதாயினும் பருவகாலங்களில் ஏற்பட்ட மாறுதல்களினால், நூறு ஆண்டுகளில்இவ்வருடம்தான் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இலங்கையில் குறைந்தளவு மழைவீழ்ச்சி காணப்பட்டதாக அவர்களது அறிக்கை தெரிவிக்கின்றது.

மாலை வேளைகளில் நாட்டின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை இருக்குமென அவதானிக்கக் கூடியதாக இருக்குமென அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது. (ச)

யாழ்ப்பாணத்தில்

## மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள மருந்துக் கடைகளில் சில மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களாக மருந்துகள் வராத காரணத்தாலும் இருப்பில் உள்ள மருந்துகள் விற்பனையானதாலும் இத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது,

நோயாளர்களுக்கான முக்கிய மருந்துகள் இல்லாமல் நோயாளர்கள் அவஸ்தைப் படுகிறார்கள். கொழும்பிலிருந்து மருந்துகள் கொண்டு வருவதற்கு வவுனியாவிலுள்ள இராணுவத்தினர் தடையாக உள்ளனர் என்று கூறப்படுகிறது. (153)

## கூட்டுறவு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் கலந்துரையாடல் நாளை 12-ம் திகதி யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் நடைபெற இருக்கிறது.

வெளிமாவட்டங்களில் இருந்து பொருட்களைக் கொள்வளவு செய்தல் பற்றி ஆராய்தல், கூட்டுறவுச் சங்கக் கடைகள் எதிர்நோக்கும் விடயங்கள் பற்றி ஆராய்தல் ஆகிய விடயங்கள் இக் கலந்துரையாடலில் இடம்பெறவிருக்கின்றன, (153)

## இலவச நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள 1500ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களுக்குநிவாரணம் வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1500 ரூபாவுக்கு மேல் வருமானம்பெறும் இடம்பெயர்ந்தோர் கிராமசேவை அலுவலர்களிடம்பதிவுசெய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (153)

## கிளிநொச்சி பகுதி வழமைக்கு திரும்புகிறது

(மாங்குளம்)

கிளிநொச்சிப் பகுதிகளில் நிலைமை மேலும் படிப்படியாக சீரடைந்து வருகிறது. இப்பகுதிகளில் சந்தை கூடுகிறது. கடைகளில் வியாபாரம் நடைபெற்றுவருகிறது. குறுகிய தூர மினி பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தீபாவளியை முன்னிட்டு அப்பகுதிமக்கள் சகலபொருட்களையும் பெறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தீபாவளி கொண்டாட்டம் களை கட்ட ஆரம்பித்துள்ளது.

மூடப்பட்டிருந்த பல கடைகளும், வர்த்தக ஸ்தாபனங்களும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (150)

## அமைதிப் பிரதேசமாகும் ஒட்டுசுட்டான் பகுதி

(மாங்குளம்)

ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மல்லாவிப்பகுதி தற்போது அமைதிப்பிரதேசமாகக் காணப்படுகிறது:

இப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் இல்லாததால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் முல்லைத்தீவு, மாங்குளம் பகுதி மக்கள் பெருமளவில் தஞ்சமடைந்துள்ளனர்.

மேலும் ஒட்டுசுட்டானில் வியாபார ஸ்தாபனங்கள் பல வழமையான கடமைகளில் ஈடுபட்டுள்ளதும் மக்கள் நடமாட்டம் பெருமளவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (150)

புங்குடுதீவுக்கு

## தபால் ஊழியர் சேவைக்கு பொதுமக்கள் பாராட்டு

(புங்குடுதீவு)

தீவுப்பகுதிக்குரிய தபால் பொதிகளை சுன்னாகம் தபாலகத்திலிருந்து அராலித்துறை ஊடாக ஐந்து தடவைகள் புங்குடுதீவு தபாலக ஊழியர்களினால் எடுத்துச்செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

சுமார் இருநூற்றிற்கு அதிகமான தபால் பொதிகளை சைக்கிளில் எடுத்து வந்த விநியோகித்த இந்த ஊழியர்களின் சேவையைப் பாராட்டி புங்குடுதீவு தபால் அதிபர் மு. நமசிவாயத்திற்கு மக்கள் கடிதம் மூலம் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சேவையில் மேற்படி தபாலகத்தைச் சேர்ந்த ஊழியர்களுடன் உதவித் தபால் அதிபரும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இராசி பலன்

11 - 10 - 1990

வியாழக்கிழமை

அஷ்டமி பி. இ. 12-41 வரை, திருவாதிரை மு. ப. 7-28 வரை, மரணயோகம், ராகுகாலம் மாலை 2-35 முதல் 3-02 வரை, நல்லநேரம் காலை 7-33 முதல் 9–02 வரை.

மேடம்: கடமையுணர்வு, சுபச்செய்தி, குடும்ப மகிழ்ச்சி, பதவி மாற்றம்.

இடபம்: குளப்பமடைதல், பயனற்ற செயல், சகோதர பகை, ஏமாற்றம்,

மிதுனம்: புதிய உறவு, காரிய வெற்றி, தொழில் சிறப்பு, தானதர்மம்.

கடகம்; அவமதித்தல், போட்டி மனப்பான்மை, குடும்ப சந்தேகம், கவலை மிகுதி.

சிங்கம்: புதிய சிந்தனை, விருந்துபசாரம். பதவி மாற்றம், குடும்ப மகிழ்ச்சி.

கன்னி: அந்நியர் சகாயம், காரியதடை, அலைச்சல்மிகுதி, தொழில் லாபம்.

துலாம்: தடுமாற்றம், கைப்பொருள் இழப்பு, குடும்ப பகை, அசதி மிகுதி,

விருச்சிகம்: சிறுவிபத்து, பணச்செலவு, நண்பர்களால் தொல்லை, குடும்ப கவலை.

தனுசு: காரிய வெற்றி பயணங்களால் நன்மை, தாய் வழி உதவி, விவேகம்.

மகரம்: எதிர்பாராதஉதவி, பணவரவு. தொழில்மாற்றம், குடும்ப சிறப்பு.

கும்பம்: பகைவர்கள் தொல்லை, தொழில் நஷ்டம், வீட்டில் ரோகம், மனச்சுமை.

மீனம்: எண்ணியது தடைப்படும், சகோதர உதவி, பிரயாசைமிகுதி, நன்மை.

ஜோஸ்யர்.

# நீரிழிவு நோய்க்கு செலவில்லா சிகிச்சை

அவசர காலமும், போர்க் கோலமும் இணைந்து நிற்கிற காலமிது. மாற்றமுடியாத நோய்களுக்கு மருத்துவமனையையோ, வைத்தியரையோ அடையமுடியாத நேரத்தில் சில முதலுதவிச் சிகிச்சைகள். செலவு குறைவு, பயன் பெரிது.

### நீரிழிவு

இந்நோயைக் குணப்படுத்த முடியாது. ஆனால் கட்டுப்படுத்தலாம். நீரிழிவு நோயின் முதல் அடையாளம் அடிக்கடி தாகம் எடுப்பது. அடிக்கடி சிறுநீர் போவது. அடுத்த அடையாளம் உடம்பின் எடை குறைந்துகொண்டே போவது. பலவீனமாயும், களைப்படைவதும் கடைசி அடையாளம்.

இரத்தத்தில் சர்க்கரை இருக்கிறதா? இதுவே நோயின் அடிப்படைக் காரணம். ஆங்கில வைத்தியரிடம் சென்றால் சிறுநீரைச் சோதனைசெய்து, இன்சுலின் ஊசி ஏற்றச்சொல்வார்கள். அடுத்து சர்க்கரை இல்லாத உணவு வகைகளை உட்கொள்வது. உணவின் மூலம் 50 வீதம் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தினமும் ஒரு கீரையை சமைத்துச்சாப்பிட்டு வரவேண்டும். எல்லாக் கீரை வகைகளிலும் முருங்கைக் கீரையே சிறந்தது: நோயாளியின் சீவியகால எல்லையை கூட்டிக் கொடுக்கும் சக்தி முருங்கைக் கீரைக்கு உண்டு. அரைக் கீரையை அல்லது அத்திப் பழத்தின் விதையை வெய்யிலில் உலர்த்திப் பொடி செய்து சிறிது தேனில் குழைத்து தினசரி மூன்று வேளை சாப்பிட்டால் நோயின் ஆரம்பநிலையில் கட்டுப்படுத்தலாம். முள்ளங்கியைத் தேங்காய் போல் துருவி எடுத்து பசுநெய், தேன், கற்கண்டு ஆகியவற்றோடு சேர்த்து லேகியம் போல் காய்ச்சி சாப்பிட்டாலும் குணமடையும். பப்பாளிப்பழம், கொய்யாப் பழம் ஆகியவற்றை தினசரி சாப்பிட்டால் சுகம் கிடைக்கும். முருங்கைக் கீரையும், எள்ளுப் பிண்ணாக்கும் உணவுடன் சேர்த்து உட்கொண்டால் நீரழிவு நோய் விரைவில் குணமடையும்.

பாகற்காயை கறியாகவே அல்லது சூப்ஆகவோ உட்கொண்டால் இன்சுலின் சக்தியைப் பெறமுடியும்?

இந்நோயை சர்க்கரை தவிர்ந்த உணவை உண்பதில் பலமும், மனநிம்மதியும் பூரண ஓய்வும், வெதுவெதுப்பான நீரில் தினசரி இருமுறை குளிப்பும் இருந்தால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம்.

க. முத்துக்குமாரசாமி

## எத்தடை வந்தாலும் தாங்கிட தமிழினம் தயாராக வேண்டும்

தங்கி வாழ்வதிலும் பார்க்க தனித்து வாழ்வதில் என்றும் ஒரு தனிப்பெருமை உண்டு.

தமிழ் இனம் எங்கும் எதிலும் தங்கி வாழ்ந்து பழகி அதுவே அவர்களது வழக்கமாகி பல்வேறு துறைகளில் எண்ணிறைந்த பிரச்சனைகளை எதிர்நோக்கி இன்று தளர்ந்து தவித்து துடிப்பதை கண்டு துவண்டுவருகிறோம்.

இத்தகைய தவிப்பு இன்றைய போர்க்கால சூழ்நிலையில் 'தென்பகுதி மின்சாரம்' என்ற உருவில் எமது வீட்டையும் நாட்டையும் தோட்டங்களையும் தொழில்துறைகளையும், ஒருமுகமாக வாட்டி வதைத்துவருகிறது.

கொள்ளவேண்டும்',

வடக்கு-கிழக்குப் பகுதிக்குத் தன்நிறைவு மின் உற்பத்திக்கான வழிவகைகளைக்கண்டறிவும் கருத்துள்ள 'சிந்தனை' காலம் கடந்தாவது நம்மனதில எழவேண்டும்-

அதற்கிடையில், இன்றைய போர்க்கால அவலத்திலாவது மண்ணெண்ணையும் இல்லையே என்று முணுமுணுக்காமல் வீட்டுக்கு விளக்கேற்ற எமது மூத்தோர் எமக்களித்த விளக்கெண்ணை முதற்கொண்டு பல்வேறு உள்ளூர் எண்ணெய் வகைகளைப் பயன்படுத்தி எமது உள்ளொளியைக் காத்திடுவோம்!

எப்படை வந்திடினும் எதிர்கொள்ள தமிழ் இளைஞர்கள் தயாராக நிற்பதுபோல எத்தடைகள் விதித்திடினும், அத் தடைகளை தாங்கிட தமிழினம் தயாராக துணிந்திட வேண்டும்.

மயூரன்

எதற்கும் தெனபகுதியையே நம்பி நம்பி நாம் இழந்து விட்டது போதும்:

அன்று 'லக்ஸபான' விலிருந்து நேரடி மின் தொடர்பு இணைக்கப்பட்டதும் விழா வெடுத்துக் கொண்டாடி மகிழ்ந்து எம்மை மற்றோரில் தங்க வைக்கும் மற்றுமொரு வரலாற்று ரீதியான தவறை மேலும் இழைக்கின்றோம் என்று நினைத்ததுமில்லை-நினைக்க முயன்றதுமில்லை!

அதன் அடிமட்ட பாதிப்பை அவலமான போர்க்காலத்தில் நன்கு அனுபவிக்கின்றோம்.

''நவீன உலகிலுள்ள நண்பன் மின்சாரம் என்பதை உணராமல் சாரமற்றவிதத்தில் கருத்துரை வழங்க முன்வரவில்லை!

மிக மிக அத்தியாவசிய சக்தியான மின்சாரத்துக்கு முழுக்க முழுக்க தென்பகுதியில் தங்கியிருக்கவேண்டிய நிலையைத்தவிர்த்து எம்பகுதிக்கு தனித்துவமான மின்வசதி ஏற்படுத்தவேண்டிய உண்மையாவது இன்று உணர்ந்து

## ஷெல்தாக்கி காயம்

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு உயரப்புலம் புனித அடைக்கல நாயகி ஆலயத்திற்கு அருகாமையில் நேற்று முன்தினம் பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல் விழுந்ததால் யாழ்ப்பாணம் கோவில்வீதியைச் சேர்ந்த திருமதி ஜெ. அருளாநந்தம் (வயது 38) காயமடைந்தார். இவர் யாழ். நகரிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (135)

## முதல்டெஸ்ட் ஆரம்பம்

(அகலாபாத்)

நியுசிலாந்து பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி நேற்று பாகிஸ்தானில் கராச்சியில் ஆரம்பமானது:

பாகிஸ்தான் அணிக்கு யாவிட்மியான்டாட்டும், நியூஸிலாந்து அணிக்கு மாட்டின் குரோவும் தலைமை வகிக்கிறார்கள். (ச)

## ★ தமிழக கரையில்
# இலங்கை தமிழ் அகதிகளின் 19 சடலங்கள் தகனம்

(சென்னை)

தமிழக மக்கள் கண்ணீர் மல்க இலங்கை தமிழ் அகதிகள் 19 பேரின் சடலங்கள் நேற்றுமுன்தினம் தமிழகத்தில் சைவமுறைப்படி தகனம் செய்யப்பட்டது.

அனலைதீவில் இருந்து இந்தியாவுக்கு வள்ளமொன்றில் அகதிகளாக சென்ற எழுபத்தெட்டுப் பேரில் கடலில் வள்ளம் கவிழ்ந்ததால் உயிரிழந்த அறுபத்தேழு பேரில் பத்தொன்பது சடலங்கள் நேற்று முன்தினம் இந்திய கரையில் ஒதுங்கியது.

இச் சடலங்களை மேற்படி வள்ளத்தில் சென்று நீந்தி உயிர் தப்பியவர்கள் அடையாளம் காட்டியதையடுத்து மாவட்ட கலெக்டரின் உத்தரவுக்கமைவாக இச் சடலங்களை சைவமுறைப்படி தகனம் செய்யப்பட்டது.

ஏனையோரின் சடலங்களை தேடுவதற்கு ஹெலிகொப்டர்களும் கடற்படைக் கப்பல்களும் ஈடுபட்டிருப்பதாக சென்னையில் இருந்து கிடைக்கும் செய்திகள் உறுதிப்படுத்தியுள்ளன. இவ் விபத்தில் பதினொரு பேர் உயிர் தப்பினர். (ச)

## இஸ்ரேலுக்கு எதிராக அமெரிக்கா வாக்களிக்கும்

(லண்டன்)

ஜெருசலத்தில் இடம்பெற்ற வன்செயல்களைக் கண்டித்து அமெரிக்கா ஐ. நா. நிறுவனம் நிறைவேற்றும் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப்போவதாக வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது. கடந்த வாரத்தில் ஜெருசலத்தில் கிறிஸ்தவ தேவாலயமொன்றுக்கு இஸ்ரேலியர்கள் அடிக்கல் நாட்டும் வைபவம் ஒன்று நடைபெற்றபோது இஸ்ரேல் பொலிசார், எதிர்ப்புத் தெரிவித்த பாலஸ்தீனியர்களைக் கண்மூடித்தனமாகச் சுட்டதில் இருபது பேர் அந்த இடத்திலே இறந்தனர். நூற்றுக்கதிகமானோர் காயமடைந்தனர். இச்சம்பவம் இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பாலஸ்தீனியப் பிரதேசத்தில் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்ற மோசமான வன்செயலாகும் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (ச)

## இரு மாணவர்களால்
# 13 வயது மாணவி தீ மூட்டி எரிப்பு

(புதுடில்லி)

13 வயது மாணவி ஒருத்தியை இரண்டு மாணவர்கள் தீவைத்துக் கொளுத்தியதால் அச்சிறுமி துடிதுடித்து இறந்துள்ளார்.

மண்டலக்கமிஷன் சிபாரிசினை எதிர்த்து மாணவர்கள் நடாத்திவரும் ஆர்ப்பாட்டங்களின் தொடர்நிகழ்வாக இத் துயரச் சம்பவம் தெற்குடில்லியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர்கள் இருவருக்கும் எதிராக கொலைக்குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளையில் நேற்று முன்தினம், தனக்குதானே தீமூட்டி எரிகாயங்களுக்குப்பட்ட தொழிற்பயிற்சி மாணவன் புதுடில்லி மருத்துவமனையில் இறந்துள்ளார்.

நேற்று நிகழ்ந்த மற்றுமொரு தீமூட்டி எரித்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கிய 16 வயது மாணவன் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ)

### யாழ். நகரில் விமானம் நோட்டம்

(நாவற்குழி)

விமானமொன்று தாழப் பறந்து யாழ். நகரை நேற்று முன்தினம்மாலை 6 மணிக்கு நீண்டநேரம் வட்டமிட்டு நோட்டமிட்டது. இதனால் யாழ்நகர வீதிகளில் சென்ற மக்கள் சிதறி ஓடினர்.

### சேத மதிப்பீடு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையினால் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சேதமடைந்த கட்டடங்கள் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டுவருகிறது.

கிராமசேவை அலுவலர் பிரிவுகள் ரீதியாக இந்த மதிப்பீட்டு வேலைகள் நடைபெற்றுவருகின்றன. (153)

### இந்திய டாக்டர் புதிய சாதனை

(லண்டன்)

ஐந்து லட்சம் கண் அறுவைச் சிகிச்சையை மேற்கொண்ட இந்திய கண் சிகிச்சை நிபுணர் என். சி. மூடியின் சாதனை இவ்வாண்டுக்கான 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

அவரது சாதனையை கௌரவித்து பில்லா நினைவுப் பரிசு வழங்கப்பட்டுள்ளது. (ச)

### 47 பேர் கருகி மாண்டனர்

(ஹைதராபாத்)

ஆந்திரா மாநிலத்தில் தீவிரவாத இளைஞர் கும்பலொன்று பயணிகள் ரயில் பெட்டியொன்றுக்கு தீமூட்டியதில் 47 பிரயாணிகள் கருகி மாண்டார்கள் பலர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் ஒஸ்மேனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வி)

### பலாலி ஷெல் நாவாந்துறையில் வெடித்தது

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் ஏவப்பட்ட ஷெல் குண்டொன்று நாவாந்துறைப் பகுதியில் விழ்ந்து வெடித்தது (வி)

### இலவச வைத்தியசேவை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அகதி முகாம்களில் தங்கியிருப்போர் நன்மைகருதி வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் இலவச வைத்திய சேவையை நடாத்தவுள்ளனர்.

இந்நிலையம் சித்தன்கேணியில் உள்ள லயன்ஸ் தொழிற்பயிற்சிக் கட்டடத்தில் இம்மாதம் 14ந் திகதி காலை ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது. (153)

### ஆட்சிக்குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விசேட ஆட்சிக்குழுக்கூட்டம் இன்று 11-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

# ஊழல் குற்றச்சாட்டு; பெனஸிர் மீது விசாரணை
## - மக்கள் ஆர்ப்பாட்டம் -

(கராச்சி)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனபா பெனசிர் பூட்டோ மீது இடைக்கால அரசாங்கம் சுமத்தியுள்ள ஊழல் குற்றச்சாட்டு சம்பந்தமான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இவ்வழக்கு விசாரணையின் போது பெனசிர் பூட்டோ சமுகமளித்திருந்தார். கடந்த முறை பெனசிர் பூட்டோ நீதிமன்றத்தில் சமுகமளித்தபோது ஆதரவாளர்கள் கண்மூடித்தனமாக நீதிமன்ற உடைமைகளை அடித்து நொருக்கியதால் இம்முறை நீதிமன்றத்தைச் சுற்றி அதிரடிப் படையினர் கடும் பாதுகாப்பு வழங்கியதுடன், அனுமதியின்றி எவரையும் நீதிமன்றத்திற்குள் செல்ல அனுமதிக்கவில்லை.

''தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, தன்னையும், தனது கட்சியையும் களங்கப்படுத்தி, நடைபெறப்போகும் தேர்தலில் தமது கட்சிக்குக் களங்கம் செயல்'' என பெனசிர் பத்திரிகையாளர்களிடம் வர்ணித்தார். (ச)

### ஹெலி தாக்குதல்

(பண்டத்தரிப்பு)

ஹெலிகொப்டர் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் பண்டத்தரிப்பு, மாகியப்பிட்டி ஆகிய பகுதிகளில் வேட்டுகளை தீர்த்தது.

பண்டத்தரிப்பு சண்டிலிப்பாய் வீதியில் இக் ஹெலி திடீரென சரமாரியாக சுட்டதால் மக்கள் மிகுந்த பதட்டமடைந்தனர். தெய்வாதீனமாக எவருக்கும் காயமேற்படவில்லை. (72)

### கூட்டுறவுசங்கம் கட்டுப்பாட்டுசபை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் புதிய கட்டுப்பாட்டுச்சபை மூலம் இயங்கத் தொடங்கியுள்ளது.

இந்தக் கட்டுப்பாட்டுச் சபை நான்கு மாதங்களுக்கு மட்டுமே இயங்கவுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் மேற்படி கட்டுப்பாட்டுச் சபைக்கு பின்வரும் உறுப்பினர்களை நியமித்துள்ளார்.

திரு. ரி. துரைசிங்கம் [தலைவர்], திரு. எஸ். லிங்கநாத பிள்ளை, திரு. எம். கதிர்காமநாதன். (153)

## மண்டல் கமிஷனுக்கு எதிராக
# மாணவர் தற்கொலை முயற்சி தொடருகிறது

(கல்கத்தா)

மண்டல் கமிஷன் சிபார்சுக்கமைவாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருபத்தேழு சதவிகித இட ஒதுக்கீடு சம்பந்தமான சட்டவரைவுக்கு எதிர்ப்புத்தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் கிழக்கு டில்லியில் நேற்றுமுன்தினமும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இரு மாணவர்கள் தற்கொலை செய்ய முற்பட்டனர். பன்னிரண்டு வயது மாணவன் ஒருவன் தனக்குத்தானே மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்துக்கொண்டார். (ச)

### யாழ்.நகரில் விறகுத்தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் விறகுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விறகுக் கட்டுகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது.

தென்மராட்சிப்பகுதிகளிலிருந்து தினமும் சைக்கிளில் விறகுக்கட்டுகளைக் கொண்டு வந்து நகரில் விற்பனைசெய்கின்றனர்.

ஒரு சைக்கிளில் கொண்டு வரப்படும் விறகு 100 ரூபா முதல் 150 ரூபா வரை விற்பனைசெய்யப்படுகிறது.

கங்குமட்டை, பாளை, பொச்சுமட்டை, தடிவிறகு தினமும் சைக்கிளில் கொண்டு வரப்படுகிறது. பொச்சுமட்டையின் விலை 50 சதமாக அதிகரித்துள்ளது.

### 'ரோபோ'க்கள் ஒலிம்பிக்கில் சாதனை!

(லண்டன்)

பிரிட்டனில் அண்மையில் நடைபெற்ற இயந்திர மனிதர்கள் பூச்சிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில், செய்வாய்க்கும், சந்திரனுக்குச்சென்று பாறைகளை எடுத்துவந்த அமெரிக்க 'ரோபோ' புதிய சாதனை படைத்து 'சாம்பியன்' பட்டத்தை வென்றது. இப்போட்டியில் சோவியத் யூனியன், ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன், சீனு நாட்டைச்சேர்ந்த 'ரோபோ'க்களும், பூச்சிகளும் கலந்து மனித குலத்தையே ஆச்சரியத்தில் மூழ்கடித்தன. சோவியத் யூனியன் ஈட்டி எறிதலில் சாதனை படைத்தது. ஜப்பானிய ரோபோ ஓட்டப் போட்டியிலும் எடின்பரோ பல்கலைக்கழக இயந்திரப்பூச்சி சுவர் ஏறி சாதனை நிலை நாட்டியது. (ச)

### செஞ்சிலுவைச்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விஷேட அதிரடிப்படை இராணுவத்தினரின் பாதுகாப்புடன் மட்டுநகருக்கு அழைத்துவரப்பட்டபோது சம்மாந்துறையிலுள்ளஇராணுவமுகாமில்வைத்து இரு இளைஞர்கள் உடன் சுட்டுக் கொல்லப்பட்டனர். மற்றைய இளைஞர்களை இராணுவத்தினர் தடுத்து வைத்தனர். இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (வி)

### புலிகள் தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

கொள்ளையிலீடுபட்ட இராணுவத்தினருக்கு தலைமை தாங்கிய அதிகாரி ஒருவரின் தலையை விடுதலைப் புலிகள் வெட்டி பொதுமக்களின் பார்வைக்கு வைத்ததாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றதாகத் தெரியவருகின்றது. [வி]

## கர்நாடக முதல்வரை பதவிவிலகுமாறு
# இ. காங்கிரஸ் வற்புறுத்தல்

(பெங்களூர்)

கர்நாடக முதலமைச்சர் விஜேந்திர பட்டீலை பதவி விலகுமாறு இந்திரா காங்கிரஸ் தலைமைப்பீடம் வற்புறுத்தியுள்ளது.

முதலமைச்சர் விஜேந்திர பட்டீலின் உடல்நிலை குன்றியிருப்பதால்தான் அவரை பதவி விலகுமாறு கட்சித் தலைமைப்பீடம் கோரியிருப்பதாக கட்சியின் முக்கியஸ்தர் தெரிவித்தார்.

கர்நாடக அமைச்சரவையில் பொறுப்பு வகித்த பதினேழு அமைச்சர்களும் ஏற்கனவே பதவிவிலகியுள்ளனர். (ச)

## யாழ்ப்பாணத்திலுள்ள
# வங்கியில் கத்திக்குத்து மூவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

':ஹட்டன் நஷனல் வங்கி'' யில் பணம் பெறச் சென்ற ஒருவர் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த இரு உத்தியோகத்தரையும் பணம் பெறச் சென்ற வாடிக்கையாளர் ஒருவரையும் கத்தியால் குத்தி காயப்படுத்தினர்.

இச்சம்பவம் நேற்று காலை 10 மணியளவில் நடைபெற்றது'.

கைதடியைச் சேர்ந்த ஒருவர் தமது வைப்பிலிருக்கும் பணத்தில் ஐயாயிரம் ரூபா பெறுவதற்கு விண்ணப்பித்தாகவும்ஆனல் 500 ரூபாவுக்கு மேல்வழங்க முடியாது என எனமு கா மை யா ர் கூறியதும் இவருக்கும் முகாமையாளருக்குமிடையில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் இரு உத்தியோகஸ்தர்கள் அவரை சமாதானப் படுத்த முயன்றபோது அவர் தம்வசம் வைத்திருந்த கத்தியால் அவ்விருவரையும் தாக்கியதாக கூறப்படுகிறது

இச்சர்ந்தர்ப்பத்தில் பணம் பெறச் சென்ற வாடிக்கையாளர் ஒருவரையும் அவர் கத்தியால் தாக்கிய போது அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு ஊழியர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் அவரை வங்கியிலிருந்து வெளியேற்றியதாகவும் கூறப்படுகிறது.

காயமடைந்த மூவரும் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (வி)

# யாழ். பல்கலைக்கழகம் நவ. 5ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் அடுத்தமாதம் 5-ம் திகதி முதல் மீண்டும் இயங்கவுள்ளது.

விஞ்ஞானம், மருத்துவ பீடங்களே முதலில் இயங்கவுள்ளது. சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் அனைவரும் அடுத்தமாதம் 5-ம் திகதி விரிவுரைகளுக்கு சமூகமளிக்க வேண்டும் என யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் திரு. துரைராஜா கூறியுள்ளார்.

டிப்ளோமா, பட்டப்படிப்புகளுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என மேற்படி உபவேந்தர் தெரிவித்தார். (வி)

## ரூபா 1,500க்கு மேற்பட்ட
# ஊதியம் பெறுவோருக்கு உணவு நிவாரணம் இல்லை
## உ. அ. அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''1500 ரூபாவுக்கு மேற்பட்ட ஊதியம் பெறுவோருக்கு இலவச உணவு நிவாரணம் வழங்கப்படமாட்டாது என யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை தெரிவித்தார்,

மேற்படி ஊதியம் பெறுவோருக்கு கட்டுப்பாட்டு விலையில் உணவுப்பொருட்களை வழங்குவதற்கு வேண்டிய புள்ளி விபரங்களைத் தயாரிக்குப்படி சகல கிராமசேவையாளர்களுக்கும் தெரிவித்துள்ளதாகவும் அதன் அடிப்படையிலேயே தற்போது கிராம சேவையாளர்கள் செயல்பட்டு வருவதாகவும் உதவிஅரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (வி)

# வடபகுதி அகதிகளுக்கு
## பல கோடி ரூபா நிவாரணம்
### யாழ்- ஆயர் இல்ல சேவை தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, தீவுப்பகுதி ஆகிய இடங்களில் உள்ள தேவாலயங்கள், பாடசாலைகளில் உள்ள ஆயிரக்கணக்கான அகதிகளுக்கு பல கோடி ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை யாழ். ஆயர் இல்லம் வழங்கிவருகிறது.

இது சம்பந்தமாக யாழ். ஆயர் இல்ல அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் கூறியதாவது:

தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் இடம்பெயர்ந்து வந்து அகதிகளாகத் தங்கியுள்ள பெருந்தொகையான மக்களுக்கு நாம் தினமும் உணவுப் பொருள்களையும், புடவைகளையும் வழங்கிவருகின்றோம்.

கொழும்பிலிருந்து கப்பல் மூலமும், லொறிகள் மூலமாகவும் பெரும் சிரமத்தின் மத்தியில் நாம் உணவுப்பொருட்களை கொண்டுவந்து அகதிகளுக்குக் கொடுக்கின்றோம்.

நெடுந்தீவுப் பகுதியில் ஒரு மாதமாக எதுவித உணவுப் பொருட்களுமின்றிக் கஷ்டப்பட்டுவந்த மக்களுக்கு நாம் வள்ளங்கள் மூலமாக கடற்படையினருக்கும், இராணுவத்தினருக்கும் தெரியாதவகையில் உணவுப்பொருட்களைக் கொண்டுசென்று வழங்கினோம்

இனமத வேறுபாடின்றி சகல மக்களுக்கும்நாம் சேவை செய்து வருகின்றோம்.

இவை தவிர கொழும்பு பொறளையில் உள்ள எமது தலைமை அலுவலகத்தில் இங்குள்ள உறவினர்களிடம் கொடுக்கும்படி ஒப்படைக்கப்படும்உணவுப்பொட்டலங்களையும், கடிதங்களையும் நாம் லொறிகள் மூலம் இங்கு கொண்டுவந்து எமது தொண்டர்கள் மூலம் விநியோகித்தும் வருகிறோம்.

இன்று யாழ்ப்பாணத்தில் தேவாலயங்களிலும், பாடசாலைகளிலுமுள்ள பெரும்பாலான அகதிகளுக்கு நிவாரணப்பொருட்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளோம் எனக்கூறினர். (வி)

### யாழ். கோட்டைப்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலினல் செல்வி நகுலேஸ்வரி முத்துக்குமாரசாமி (17 வயது), அரியாலை என்ற இளம்பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

கோட்டைப் பருதியைச் சுற்றி பல தடவை வட்டமிட்ட இந்த விமானம் மூன்று தடவைகள் குண்டுத் தாக்குதலை நடத்தியது. (56)

### மன்னர் மாவட்டத்தில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் அச்சம் காரணமாக வெளியேறிய முஸ்லிம் வட்டார மக்கள் தமது குடியிருப்புகளுக்கு திரும்பியுள்ளனர்.

**உணவுப்பொருள்**

மன்னர் பகுதியில் உணவுப் பொருள்கள் வவுனியாவிலிருந்து விடத்தல் தீவுக்கு லொறிகள் மூலம் எடுக்கப்பட்டு அங்கிருந்து கடல்மார்க்கமாக எருக்கலம்பிட்டிக்கு எடுத்துவரப்படுகின்றது. கல்பிட்டி வழியாக கடல்மார்க்கமாக உணவு எடுத்து வருவதால் உணவு நிலைமை திருப்திகரமாகவுள்ளது.

**புலிகள் பாதுகாப்பு**

மன்னர் மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளே மக்களுக்கு பாதுகாப்பும் அவசிய உதவிகளையும் செய்துவருகின்றனர். இதனல் இங்கு அச்சமின்றி மக்கள் நடமாடுவதையும் சகல பணிகளையும் நிறைவேற்றிச்செல்வதையும்அவதானிக்க முடிகிறது.

இங்கு கடமையாற்றும் அரசாங்க ஊழியர்களும் பணிக்கு திரும்பியுள்ளனர். (ச)

### கோண்டாவில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் தோய்ந்து காணப்பட்டது. தெய்வாதீனமாக காயமெதுவுமின்றி அக்குழந்தை தப்பிக்கொண்டது.

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் நேற்றுக்காலை 11 மணியளவில் மூன்று பொம்மர்கள் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டன.

எதிர்பாராதவிதமாக திடீரென இடம்பெற்ற இக்குண்டுத் தாக்குதலினல் வீட்டினுள் இருந்த ஏழு நாள் குழந்தைக்குத் தாயான சிவபாக்கியம் வரதராசா (வயது 33) என்பவரே ஸ்தலத்தில் பலியானவராவார். பலியானவரின் கணவன் இராசரத்தினம் வரதராசா (வயது 35) ஆண்குழந்தை வரதராசா யதீஸ்வரன் (வயது 2) மற்றும் சோமசுந்தரம் சண்முகலிங் (வயது 7) மகாதேவி சண்முகலிங்கம் (வயது 47) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (56)

### வடபகுதி மின்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராண்ஸ்போமரிலிருந்து ஒயில் திருடப்பட்டுள்ளதால் திருடப்பட்ட பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்கப்படும்.

பலத்த சிரமத்தின் மத்தியில் கிடைக்கவிருக்கும் மின் சாரத்தை சட்டவிரோத பாவனைக்கு உட்படுத்தவேண்டாமென்று பொதுமக்கள் கேட்கப்படுகின்றனர்.

பரீட்சார்த்தமாக நடைபெறும் இந்த மின்விநியோகம் வெற்றியளிக்கும் பட்சத்தில் மானிப்பாய், தெல்லிப்பழை ஆகிய இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கும் குடாநாட்டிலுள்ள ஏனைய பகுதிகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under nuqer B/100306/81.

## சாவகச்சேரி சம்பவத்தில்
# இறந்தோரின் எண்ணிக்கை பதினென்ருக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஹெலி தாக்குதலினல் படுகாயமடைந்துமானிப்பாய் யாழ். போதன வைத்தியசாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவரான எஸ், புஸ்பராணி (வயது 25) என்பவர் நேற்று மரணமானர்.

இச்சம்பவத்தின்போதுஇறந்தோரின் எண்ணிக்கை பதினென்ருக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது (56)

# 6 இளைஞர் சுட்டு எரிப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கருவப்பங்கேணிப் பகுதியிலுள்ள 6 தமிழ் இளைஞர்களை சிங்கள இராணுவத்தினர் கைதுசெய்து சுட்டுக் கொன்றதுடன்இளைஞர்களின் சடலங்களை ரயர் போட்டு எரித்தனராம்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

### சகல பாடசாலை
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வடமாநில கல்விப் பணிப்பாளர் இரா, கந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்டமுடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் சம்பந்தமாக பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளிலுள்ள சகல வகுப்புகளும் முன்னர்போல் நடத்தப்படலாம்,

பாடசாலைகளில் பதுங்கு குழிகள் அமைத்தல்போன்ற பாதுகாப்பு ஒழுங்குகளை முதலிலே மேற்கொள்ளல்வேண்டும். இவற்றை அமைப்பதன் பொருட்டு பாடசாலை அபிவிருத்திச்சபைகள், பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பினைப் பெறுதல் வேண்டும்.

அமைக்கப்படும் பதுங்கு குழிகளை 50 பேருக்கு ஒன்று என்ற ரீதியில் இருக்கலாம். தேவைப்படும்போது உரிய சமிக்ஞைகள் கொடுத்தும் பாதுகாப்புக்காக மாணவர் பதுங்குகுழிகளுள் புகும்பயிற்சிகள் முன்கூட்டியே ஒத்திகை பார்க்கப்படுதல்வேண்டும்.

காலநிலை சீராகும்வரை பாடசாலைகள் ஒருநேரப் பாடசாலையாகவும் நடத்தலாம.

போக்குவரத்து வசதிகள் சீராகும்வரை மாணவர்களை அவர்களின் வசிப்பிடங்களுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளிலே சேர்ப்பதற்கு அதிபர்கள் தற்காலிக வசதிகளைச் செய்துகொடுத்தல் வேண்டும்.

அகதிகள் தங்கியிருக்கும் பாடசாலைகள் தொடர்பாக அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களின் ஆலோசனையுடன் அதிபர்கள் மாற்றொழுங்குகளை மேற்கொண்டு, அவ்வொழுங்குகள்பற்றி உதவிக் கல்விப்பணிப்பாளர்களின் அங்கீகாரத்தைப் பெறுதல்வேண்டும்,

சேதமடைந்து நடத்தமுடியாத நிலையிலுள்ள பாடசாலைகளில் அதிபர்கள் தத்தமது உதவிக் கல்விப்பணிப்பாளரின் அனுசரணையுடன் மாற்று ஒழுங்குகளைச் செய்தல்வேண்டும்.

வெளி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்திருக்கும் மாணவர்களுக்கு பாடசாலைகளில் கல்விபயில அதிபர்கள் உதவ வேண்டும். அனுமதிப்பதற்கு ஆவணங்கள் வேண்டுமென்று நிர்ப்பந்தித்தலாகாது.

தற்போது ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கும்பாடசாலைகளுடன் இனிமேலும் புதிதாக பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் அதிபர், ஆசிரியர்கள் அவ்வப்பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் போன்ருேரின் அனுசரணையுடன் பாதுகாப்பு செயற்பாடுகளை பூர்த்தியாக்கியதும் பாடசாலைகளை கூடிய விரைவில் தொடங்கலாம். (153)

# கடற்படை சுட்டு ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

திருக்கோவில் பகுதியில் மீன் பிடிக்கச்சென்ற மீனவர் மீது கடற்படை சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார் நாலு மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (வி)

### இந்தியா
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டு குறுக்கு வழிகளைக் கையாண்டு தமிழ் மக்களை அழிக்கும் முயற்சியை கைவிட்டு தமிழ்மக்களின் தன்னுரிமையை அங்கீகரிக்க வேண்டும்,

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஜே. ஆர். ராஜீவ் ஒப்பந்தம் செய்யப்பட்டது இதனை ஏற்க மறுத்தமைக்கு இந்தியா 10-10-1987 ல்போர் தொடுத்தது.

இந்தப் போரினல் யாழ். குடாநாட்டில் 30 நாட்கள் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் நடைமுறை படுத்தப்பட்டது.

மிகக் குறுகிய காலத்தில் 20 நாட்களுள் 2000க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். 5 லட்சம் மக்கள் குடாநாட்டிற்குள் அகதிகள் ஆனர்கள்.

யாழ். போதன வைத்தியசாலையில் 'வைத்தியர்கள். தாதிகள், நோயாளர்கள் என 80க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகள் நடந்த தமிழீழ - இந்தியப் போரில் 5000கரும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

தமிழீழம் இவற்றிற்கு எதிராகப் போராடியது. இறுதியாக இந்தியா தமிழ் மக்கள் மீது அடக்கு முறையையோ அல்லது வேறு எந்த விதமாகவோ அவர்கள் விரும்பாத தீர்வை திணிக்க முடியாது என்பதை உணர்ந்து இங்கிருந்து வெளியேறியது.

தமிழீழ – சிறிலங்கா பேச்சுவார்த்தைவய சிறிலங்கா தனக்கு சார்பாக பயன்படுத்த முயற்சித்தமைக்கு நாம் விட்டுக் கொடுத்ததன் விளைவே தமிழீழ -சிறிலங்காப் போர் ஆகும்.

இந்திய தமிழீழப் போரின் போது தனது படை பலத்தை பெருமளவில் வளர்த்துக் கொண்டு சிறிலங்கா தனது படைப்பலத்தை நம்பியதும் தமிழ்மக்களின் அபிலாசைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சிங்கள இனவாதமே இந்தப் போருக்கு காரணங்கள் ஆகும்.

இந்தியப்படை செய்ததைப் போலவே சிறிலங்காவும் செயற்பட்டு வருகின்றது.

குறுகிய காலத்தில் 3000க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்', தமிழீழத்தில் 8 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் அகதிகள் ஆக்கப்பட்டனர். 1 லட்சத்திகும் மேற்பட்ட தமிழ் மக்கள் அகதிகளாக இந்தியாவுக்குச் சென்றனர்.

அடக்குமுறை அரசின் அழிவுகளிலிருந்து எம்மையும் காப்பாற்றலாம். தமிழீழ மக்களே கடந்த மூன்ருண்டு படிப்பினையை நாம் மறந்துவிட வேண்டாம்.

ஆசை வார்த்தைகளுக்கு மயங்காமல் அடக்குமுறைக்கு கலங்காமல் உறுதியாக மன வலிமையுடன் போராடினல் நிச்சயம் வெற்றி கிடைக்கும். இதுதான் எமது கடந்தகால அனுபவமாகும்.